**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 768/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **பிரபு** |
| Father's / Husband Name | : | **சுந்தர்ராஜ்** |
| Address | : | **தம்பிராண்பட்டி** |
| Age | : | 50/2026 |

**தேதி : 24.06.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தம்பிராண்பட்டியில் வசித்து மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். அ.சா. 1 என்னுடைய உறவினர். அ.சா.1ன் மகன் அரவிந்த் என்பவர் கடந்த ஆண்டு தனியார் கல்லூரி ஒன்றில்படித்து கொண்டிருந்தார். அவருடன் மற்ற இரண்டு நண்பர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கலத்தூர் சாலையில் விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் கார் ஒன்று ஈடுபட்டதாகவும் கேள்விப்பட்டேன். இருசக்கர வாகனத்தில் சென்ற எனது உறவினர் மகனையும், மற்ற இருவரையும் மருத்துவமனையில்சேர்த்திருப்பதாக தகவல் வந்தது. சம்பவ நாள், மாதம், வருடம், நேரம் எனக்கு நினைவில்லை.

எனது உறவினர் மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் விபத்து ஏற்படுத்தியாக சொல்லும் காரில் பதிவு எண், அதன் ஓட்டுநர் பற்றி ஞாபகமில்லை. துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த

என்னுடைய உறவினர் மகன் சிகிச்சை பலனின்றி அன்றே இறந்துபோய்விட்டார். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.01.2025ம் தேதியன்று TN 46 V 7333 என்ற இருசக்கர வாகனத்தின் கிழக்கிருந்து மேற்கு நோக்கி டீ களத்தூர் பிரிவு ரோட்டில் மேற்படி வாகனத்தை தீபன்ராஜ் என்பவர் ஒட்ட அவருக்கு பின்னால் எனது உறவினர் மகன் அரவிந்த் அமர்ந்தும், மூன்றாவதாக கவிமணி என்பவர் அமர்ந்துகொண்டு சாலையில் இடதுபுறமாக சென்றபோது அதே சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 57 AJ 9316 என்ற வாகனத்தை எதிரி அஜாக்கிரதையாக, கவனக்குறைவாக ஒட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி இருசக்கர வாகனத்தில் சென்ற மூவருக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்றிருப்பதாக தகவல் வந்ததன் பேரில் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது உறவினர் மகன் அரவிந்த் என்பவருக்கு வலதுபக்க தொடையில் காயம் ஏற்பட்டும், தலையில்அடிப்பட்டும், தீபன்ராஜ் என்பவருக்கு வலது கால், இடது கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டதாகவும், கவிமணி என்பவருக்கு வலது கால்இடுப்பு ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் சிகிச்சை பலனின்றி இறந்துபோய்விட்டதாகவும் அதைபற்றி போலீஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு எதிரியுடன் அ.சா.1 சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.06.24 15:48:08 +0530

Judicial Magistrate No.1
Perambalur.